Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JULY 17, 2024

புதன்கிழமை ஜூலை 17, 2024 | ஒளி: 10 கதிர்: 296 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## விலைகள் குறைப்பு



மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டமைக்கு சமாந்தரமாக உணவகங்களில் உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஹரிஷண ருக்ஷான் தெரிவித்தார்.

அதனடிப்படையில் பிரைட் ரைஸ், கொத்து மற்றும் சோறு 25 ரூபாவினாலும் பராட்டா, முட்டை ரொட்டி உள்ளிட்ட சிற்றுண்டிகள் 10 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் அறிவித்தார்.

### காத்தான்குடி வீட்டின் மீது வீசப்பட்டது

# புதுவகை குண்டா?

**பல கோணங்களில் விசாரணை**





**கனகராசா சரவணன், எம்.எஸ்.எம்.நூர்தீன், ரீ.எல்.ஜவ்பர்கான்**

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பூநொச்சிமுனை பகுதியில் வீடொன்றில் மீது திங்கட்கிழமை(16) இரவு இடம்பெற்ற குண்டு தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட குண்டு தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அங்கு பாவிக்கப்பட்ட குண்டு, தயாரிக்கப்பட்ட குண்டாகும். அது எவ்வகையைச் சேர்ந்தது என தெரியாது. இது புதுவகையானதாகும்.

தொடர்ச்சி P2

### ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு

# "மாத இறுதிக்குள் வெளியாகும்"



**தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது**

**புஷ்பராசா மயூரதி**

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு இம்மாத இறுதிக்குள் வெளியாகும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க, ராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் கட்டட மண்டபத்தில், செவ்வாய்க்கிழமை (16) நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு தொடர்பில் வெளியிடப்படும் பல்வேறு வதந்திகள், கருத்துகள் போன்றவற்றைத் தெளிவுபடுத்துவதற்காகவே இந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்பாடு செய்ததாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறினார்.

1976ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாகத் தேர்தல்கள் திணைக்களத்திலும் பின்னர் ஆணைக்குழுவிலும் கடமையாற்றிக் கிட்டத்தட்ட 15 முதல் 20க்கு மேற்பட்ட தேர்தல்களை நடத்தியுள்ள போதிலும் இதுபோன்றதொரு சூழலைத் தாம் இதற்கு முன்னர் கண்டதில்லை எனவும் தேர்தல்கள் ஆணையாளர் இங்கு சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

## ரணிலின் அழைப்பை நிராகரித்தது டெலிபோன்

**ரணிலையே போட்டியிடுமாறும் வலியுறுத்தல்**





தேசத்தைப் பாதுகாப்பதற்கு தமது ஆதரவை வழங்கினால், அவர்களின் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையை மீள இணைத்துக் கொள்வதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விடுத்த கோரிக்கையை, டெலிபோனை சின்னமாகக் கொண்டிருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஏனையவர்கள் நிராகரித்துள்ளனர்.

இதனை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் மற்றும் கட்சியின் பிரசார முகாமையாளர் சுஜீவ சேனசிங்க ஆகியோர், செவ்வாய்க்கிழமை (16) தெரிவித்தனர்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் செவ்வாய்க்கிழமை (16) ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



## ஒலிம்பிக் தீபத்தை ஏந்திய தர்ஷன் செல்வராஜா

இலங்கைத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த தர்ஷன் செல்வராஜாவுக்கு ஒலிம்பிக் தீபத்தை ஏந்திச் செல்லும் வாய்ப்பு முதன்முறையாக கிடைத்தது.பிரான்ஸ் பாரிஸ் நகரில் திங்கட்கிழமை (15) அவருக்கு இந்த வாய்ப்பு கிடைத்தது. ஒலிம்பிக் தீபத்தை 2.5 கிலோ மீற்றர் தூரம் அவர் ஏந்திச் சென்றுள்ளார். பிரான்ஸில் சுவையான பாண் தயாரிக்கும் போட்டியில் வெற்றி பெற்ற முதல் ஆசிய நாட்டவர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


## ஒரு கோடி பேர் வாக்களிக்க தகுதி

**புஷ்பராசா மயூரதி**



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் 2026ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு பயன்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ள மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள்) எஸ்.அச்சுதன், ஒரு கோடி பேர், வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்றார்.

தொடர்ச்சி P2



# தண்ணீருக்கு சூத்திரம்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் மீளாய்வு செய்வதற்கான கட்டணக் கொள்கை மற்றும் சூத்திரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தின் புதிய கட்டணக் கொள்கை மற்றும் சூத்திரம் குறித்து 08-04-2024 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

அங்கு அனைத்து அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தேவையான திருத்தங்களைச் செய்து புதிய கட்டணக் கொள்கை மற்றும் சூத்திரத்தை முன்வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு முதல் திருத்தப்பட்ட நீர் கட்டண கொள்கை மற்றும் திருத்தப்பட்ட நீர் கட்டண சூத்திரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## "இன்னும் இறுதி தீர்மானம் இல்லை"



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பது தொடர்பில் இதுவரையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### மலையக பிற்போக்கு அரசியல்வாதிகள்,

## "கோமாளி கூத்துகளை நிறுத்த வேண்டும்"

**மனோ கோரிக்கை: மலையக பெண்கள் குறித்தும் கேள்வி**



இவ்வாண்டு அதிகரித்த தேயிலை ஏற்றுமதியால், ஈரானிடம் வாங்கிய பெட்ரோல் கடனில் 60 மில்லியன் டொலரை மீளச் செலுத்த முடிந்தமையை எண்ணி ஓர் இலங்கையனாக மகிழ்கிறேன். அது நம் நாட்டுக்கு ஒரு நற்செய்தி. ஆனால், அந்த தேயிலையை உற்பத்தி செய்ய ஆண்டாண்டு காலமாகத் தேயிலை மலைகளில் நாள் முழுக்க பாடுபடும் எங்கள் குலப் பெண்களுக்கு நல்ல செய்தி எப்போது வர போகிறது என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. கேள்வி எழுப்பி உள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் மனோ கணேசன் எம்.பி.

தொடர்ச்சி P2

### பாடசாலை மட்டத்தில் இருந்தே

# "அரசியலமைப்புச் சட்டம் கற்பிக்கப்பட வேண்டும்"

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தல்**

சமூகத்தில் உள்ள பலர் ஜனநாயக நாட்டில் காணப்பட்டுவரும் பல்வேறு துறைகளினது அதிகாரங்கள் குறித்து வெவ்வேறு கதைகளைச் சொல்லி வருகின்றனர். நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம் மற்றும் நீதித்துறை அதிகாரங்கள் குறித்துப் பேசுகையில், சிறு வயதிலிருந்தே பிள்ளைகளுக்குச் சட்டம் தொடர்பாக, அரசரிவியல் தொடர்பாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்று நான் உண்மையாக கருதுகின்றேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்நாட்டைக் கட்டியெழுப்பத் தெரிவாகும் அரசாங்கம் கொள்கைகளை வகுப்பது அரசியலமைப்பின் பிரகாரம் என்பதனால் பிரஜைகள் இது அறிந்து கொள்ள வேண்டும். இதன் காரணமாகப் பாடசாலை நூலகத்தில் அரசியலமைப்பின் பிரதிகள் இருக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தினார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், மன்னார், தேவன்பிட்டிய றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (16) இடம்பெற்றது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# புதுவகை குண்டா?

பரீட்சித்து பார்ப்பதற்காக என பல கோணங்களில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் விசேட அதிரடிப்படையினர் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பூநொச்சிமுனை முகைதீன் ஜூம்ஆஹ பள்ளி வீதியில் உள்ள வீடொன்றின் கூரை மீது திங்கட்கிழமை (15) இரவு 8.30 மணிக்கு பாரிய சத்தத்துடன் குண்டு வெடித்து, தீ பிழம்பு வெளியேறியது.

இதனையடுத்து, வீட்டின் அறைப் பகுதியிலுள்ள இரு ஓடுகள் உடைந்து கீழே வீழ்ந்துள்ளன. ஆனால், வீட்டிலிருந்த எவருக்கும் எவ்விதமான பாதிப்பும் ஏற்படவில்லை. எனினும், குண்டு வெடிப்பினால் கிளம்பிய புகை மனத்தினால் பெண்ணொருவர் வாந்தி எடுத்துள்ளார். அதனையடுத்து பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், இராணுவத்தினர் விசேட அதிரடிப்படையின் விசாரணைகளை மேற்கொண்டனர். இருந்தபோதும் குண்டு தாக்குதலுக்கான எவ்விதமான தடயங்களும் இல்லாத நிலையில் இது குண்டுதாக்குதாலா? என கண்டறிய முடியாது குழப்பமடைந்தனர்.

இந்நிலையில், தடயவியல் பிரிவு பொலிஸார் செவ்வாய்க்கிழமை (16) வரவழைக்கப்பட்டர். அவர்கள் மேற்கொண்ட சோதனை அடிப்படையின் குறித்த வீட்டின் பின்பகுதியிலுள்ள அறை பகுதியைக் கொண்ட கூரை மீது இந்த குண்டு தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும் அந்த குண்டில் இருந்து வெளிவந்த சிறிய ரக சன்னங்கள், தகரங்களைத் துளைத்துக் கொண்டு போயுள்ளதைக் கண்டு பிடித்தனர். இதனைத் தொடர்ந்து வெடித்த குண்டில் இருந்து வெளியேறிய சிறிய ரக சன்னங்களைக் கண்டுபிடித்து மீட்டதுடன் குண்டை யாரே வீட்டின் பின்பகுதி வீதி வழியாகச் சென்று வீட்டின் மீது வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர். அத்துடன், இது தயாரிக்கப்பட்ட குண்டாக இருக்கலாம் எனவும் சந்தேகம் தெரிவித்தனர். இந்த வகையான குண்டை முதன்முதலாகப் பார்ப்பதாகவும் இது புது வகையான தயாரிப்பாக இருக்கலாம் எனவும் இது எவ்வாறான தயாரிப்பு என கண்டறியப்படவில்லை என்று, தயாரிக்கப்பட்ட குண்டை பரீட்சித்துப் பார்ப்பதற்காகவா? வீசப்பட்டுள்ளது, யார் செய்தனர்? ஏன்? எதற்காக? என்பதுபோன்ற பல கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# "மாத இறுதிக்குள் வெளியாகும்"



ஜூலை மாதம் 17ஆம் திகதிக்குப் பின்னர் ஒகஸ்ட் மாதம் 20ஆம் திகதி வரையில் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிடுவதற்கு அரசியல் யாப்பு மற்றும் தேர்தல் சட்டங்களுக்கு அமைவாக, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

அதனடிப்படையில் ஜூலை மாதம் இறுதிக்குள் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகும். அந்த தினத்தில் இருந்து 14 முதல் 21 நாட்களுக்குள் வேட்புமனு கோரல் திகதி நிர்ணயிக்கப்படும் என்றார்.

## ஒரு கோடி பேர் வாக்களிக்க தகுதி

ராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில், செவ்வாய்க்கிழமை (16) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில்,

2024 பெப்ரவரி 1 ஆம் திகதிக்கு முன்னர் 18 வயதை பூர்த்தியடைந்தவர்கள் அனைவரும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். அத்துடன் பெப்ரவரி 1ஆம் திகதி முதல், மே 31ஆம் திகதி வரையிலான இடைப்பட்ட காலப்பகுதியில் 18 வயதைப் பூர்த்தி செய்தவர்களும் இந்த வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றார்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட குறை நிரப்பு வாக்காளர் பட்டியலில் உள்ளவர்களும் அடங்கலாகப் புதிதாக 76 ஆயிரம் பேர் சேர்க்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒருகோடியே 71 இலட்சத்து 40 ஆயிரம் வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்றார்.

# ரணிலின் அழைப்பை நிராகரித்தது டெலிபோன்

"தேசத்தைப் பாதுகாப்பதற்காக நாங்கள் அவருக்கு ஆதரவளித்தால் ஐக்கிய தேசியக் கட்சியில் எங்களின் உறுப்புரிமையை மீள இணைத்துக் கொள்ள ஜனாதிபதி முன்வந்துள்ளார்.

எவ்வாறாயினும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, பிரசன்ன ரணவீர மற்றும் ரோஹித அபேகுணவர்தன ஆகியோருடன் நாங்கள் மேடையில் இருக்க விரும்பாததால் இந்த வாய்ப்பை ஏற்க நாங்கள் தயாராக இல்லை" என பாராளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.

> **டி.எஸ்.சேனாநாயக்க, டட்லி சேனாநாயக்க, லலித் அத்துலத்ஜமுதலி மற்றும் காமினி திசாநாயக்க போன்ற மறைந்த ஐ.தே.க. தலைவர்களின் அபிவிருத்தி பாணியை மீண்டும் ஒருமுறை ஐக்கிய மக்கள் சக்தி வெளிச்சத்துக்குக் கொண்டுவரும்**

"ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாமா? வேண்டாமா என்ற குழப்பத்தில் ஜனாதிபதி இருப்பதாகத் தெரிகிறது, ஏனெனில் அவர் முன்னர் கூறியது போல் பதினைந்து முதல் இருபது வரையிலான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களின் ஆதரவைப் பெற முடியாது. எவ்வாறாயினும், அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது எங்களுக்குச் சாதகமாக இருக்கும் என்பதால், அவர் தேர்தலில் போட்டியிட வேண்டும் என விரும்புகிறோம்," என்றார்.

டி.எஸ்.சேனாநாயக்க, டட்லி சேனாநாயக்க, லலித் அத்துலத்ஜமுதலி மற்றும் காமினி திசாநாயக்க போன்ற மறைந்த ஐ.தே.க. தலைவர்களின் அபிவிருத்தி பாணியை மீண்டும் ஒருமுறை ஐக்கிய மக்கள் சக்தி வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் சேனசிங்க தெரிவித்தார்.

# "கோமாளி கூத்துகளை நிறுத்த வேண்டும்"

மேலும் கூறியதாவது;

இது ஈரானுக்கு மட்டும் அல்ல, உலகின் பல நாடுகளிடம் இருந்து நாம் வாங்கிய கடன்களுக்கும் பொருந்தும். பல காலமாகவே பொருந்தும். 1948ம் ஆண்டு சுதந்திரம் பெற்ற போது, இலங்கை ஆசியாவில் ஜப்பானுக்கு அடுத்த படியாக அதிகம் அந்நிய செலாவணி, அதுவும் ஸ்டேர்லிங் பவுண்ட்சில் திறைசேரி இருப்பை கொண்ட நாடாக இருந்தது.

அந்த ஸ்டேர்லிங் பவுண்ட்சில் திறைசேரி இருப்பு முழுக்க முழுக்க எங்கள் உழைப்பால் பெறப்பட்டது. இது உண்மை. இலங்கையில் அன்று பெருந்தோட்ட தொழிற்துறையைத் தவிர, பெயருக்குக் கூட வேறு ஏற்றுமதி தொழிற்துறைகள் இருக்கவில்லை. ஆகவே அன்று முதல் இன்றுவரை கொழும்பு அவிசாவாளைத் தொடக்கம் கேகாலை, இரத்தி னபுரி, களுத்துறை, கண்டி, பதுளை, நுவரெலியா மலைகளில் நாள் முழுக்க எங்கள் பெண்கள்தான் பாடுபடுகிறார்கள் என்றார்..

1948ம் முதல் நமது மக்களின் உழைப்பைக் கொண்டு பெற்ற அந்நிய செலாவணி இருப்பை வைத்துத் தான், மாறி மாறி வந்த இலங்கை அரசு தலைவர்கள் தாராளமாக ஆட்டம் போட்டார்கள். தமது வாக்காள மக்களுக்கு கையை வீசி, இலவசமாக அள்ளி, அள்ளி வழங்கி வாக்குகளை பெற்றார்கள். அந்த அரசுகளில் நமது மக்களைப் பிரதிநிதித்துவம் செய்த பிற்போக்கு பேர்வழிகளும், நமது மக்களை விற்று, சாப்பிட்டு, ஆட்டம் போட்டார்கள்.


இனியாவது மலையக பிற்போக்கு அரசியல்வாதிகள், கோமாளிக் கூத்துகளையும், வாய் சவடால்களை நிறுத்தி விட்டு, இலங்கை சரித்திரத்தை, பொருளாதார வரலாறுகளைக் கற்றறிந்து, எமது மக்களின் உரிமைகளுக்குக் குரல் எழுப்ப வேண்டும். இந்நோக்கில் தமிழ் முற்போக்கு கூட்டணி எவருடனும் கரம் கோர்த்து செயல் படத் தயார்.

இன்று நாம் முற்போக்கு கூட்டணியினராக அரசுக்கு எடுத்து உரைக்கிறோம். இனியும் எங்கள் மக்களை ஏய்த்துப் பிழைக்க முடியாது. எங்கள் உழைப்பால் வரும் வாழ்வு உங்களுக்கு மட்டும்? சாவு மட்டும் எங்களுக்கா? நான் ஒரு இலங்கையன், இதனால், நான் எப்போதும் பெருமை அடைகிறேன். இது பல வருடங்களாக நான் உரக்கக் கூறி வரும் எனது கொள்கை. ஆனால், எனது மக்களை அடகு வைத்து, அதன் மூலம் எனக்கு நாட்டுப் பற்று வேண்டாம் என்பதும் எனது கொள்கையாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி முன்னாள் வைத்திய அத்தியட்சகர்

# அருச்சுனாவுக்கு பிணை: முகநூல் நேரலைக்கு தடை

எம்.றொசாந்த்



சாவகச்சேரி வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அருச்சுனாவை சாவகச்சேரி நீதவான் நீதிமன்று 75 ஆயிரம் ரூபாய் சரீரப் பிணை மற்றும் நிபந்தனை பிணையில் விடுத்துள்ளது.

சாவகச்சேரி வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அருச்சுனாவுக்கு எதிராக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் 05 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அவற்றின் மீதான விசாரணைகள் செவ்வாய்க்கிழமை (16) மன்றில் நடைபெற்றது. பிரதிவாதியான வைத்தியர் மன்றில் முன்னிலையாகி இருந்தார்

வழக்கு விசாரணைகளை அடுத்து, வைத்தியரை 75ஆயிரம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவித்த நீதிமன்றம் , வைத்தியசாலைக்கு செல்லவோ , நீதிமன்ற வழக்கு விசாரணைகள் தொடர்பில், முகநூல் நேரலையிலோ ,பதிவுகள் ஊடாக கருத்து தெரிவிக்கவோ கூடாது உள்ளிட்ட நிபந்தனைகளையும் நீதிமன்றம் விதித்துள்ளது.

அதேவேளை, குற்றம் சாட்டிய மற்றைய வைத்தியர்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு சென்று வாக்குமூலங்களை வழங்குமாறும் வைத்தியர் அருச்சுனாவுக்கு நீதிமன்றம் கட்டளையிட்டது.

அத்துடன், பொலிஸ் நிலையத்திற்கு வந்து வாக்குமூலம் அளிக்கத் தவறினாலோ , அல்லது ஆதாரங்களைச் சமர்ப்பிக்கத் தவறினாலோ அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

# "இன்னும் இறுதி தீர்மானம் இல்லை"

தற்போதைய ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பொருளாதார வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என தாம் நம்புவதாக ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில், திங்கட்கிழமை (16) இரவு இடம்பெற்ற அரசியல் விவாத நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# "அரசியலமைப்புச் சட்டம் கற்பிக்கப்பட வேண்டும்"

இந்நிகழ்வில், முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

அரசியலமைப்புச் சட்டம் என்பது ஒரு நாட்டின் உயரிய சட்டமாகும். ஜனநாயக முறைமைகள், ஜனநாயகக் கட்டமைப்பின் மூன்று தூண்கள் குறித்து சிறுபராயத்திலிருந்தே தெரிந்து கொள்ளும் பொருட்டு, ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் சகல அரச பாடசாலைகளுக்கும் மூன்று மொழிகளிலும் அமைந்த அரசியலமைப்பின் பிரதிகளை வழங்கி வைப்போம். இதன் மூலம் அரசியலமைப்பு குறித்து அறிந்து தெரிந்த பிள்ளைகளையும் குடிமக்களையும் கொண்ட சமூகத்தை உருவாக்குவோம்.

> **அரசியலமைப்பில் உள்ள மனித உரிமைகள் அடிப்படை உரிமைகளுக்கு இங்கு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும். அடிப்படை உரிமைகளுக்காக எம்மால் நீதிமன்றத்தை நாடலாம்**

அவ்வாறு தெரிந்து கொள்ளும் போது, அரசியலமைப்பு, நீதித்துறை குறித்து யார் என்ன கதைகளைச் சொன்னாலும் அவை உண்மையா பொய்யா என்பதைச் சகலராலும் புரிந்து கொள்ள முடியுமாக இருக்கும். இதன் மூலம் விழிப்புணர்வு சார்ந்த அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அரசியலமைப்பில் உள்ள மனித உரிமைகள் அடிப்படை உரிமைகளுக்கு இங்கு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும். அடிப்படை உரிமைகளுக்காக எம்மால் நீதிமன்றத்தை நாடலாம். என்றாலும், அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் கொள்கையடங்கிய 6ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக நீதிமன்றத்தின் உதவியை நாட முடியாது. இது குறித்து நாட்டு மக்கள் விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

அத்துடன், கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் போது, அரசியலமைப்புச் சட்டத்தின் பிரதிகளைப் பாடசாலைகளுக்கு வழங்க வேண்டும். அவ்வாறே இதை பாடத்திட்டத்திலும் உள்ளீர்க்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் சரியானதைச் சரியான முறையில் அறிந்து கொள்ள முடியும். ஒவ்வொருத்தரும் சொல்லி வரும் கதைகளை விட, மக்கள் தாமாகவே புத்திசாலித்தனமான தீர்மானங்களை எடுக்க முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

ஆடிப்பிறப்பினை முன்னிட்டு

# பனங்கட்டிக் குட்டான் விற்பனை அமோகம்





புகழிந்தன்

உலக வாழ் இந்து மக்களால் அனுஷ்டிக்கப்படும் ஆடிப்பிறப்பு நாளை முன்னிட்டு, யாழில் பெரிய பனங்கட்டி குட்டான் கொள்வனவு செய்வதில் மக்கள் மிகவும் ஆர்வம் காட்டிவருகின்றனர். ஆடிப்பிறப்பினை முன்னிட்டு யாழ். நகர் பலசரக்கு கடை மற்றும் சந்தைப் பகுதிகளிலும் பொருட்கொள்வனவு செய்வதில் அதிகம் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

அந்த வகையில், யாழ். நல்லூர், திருநெல்வேலி சந்தையிலும் பலசரக்கு வியாபார நிலையங்களிலும் ஆடிப்பிறப்புக்கான ஆடிக் கூழ் காச்சுவதற்காக பனங்கட்டி குட்டான், பயறு, அரிசி, மா, கஞ்சான், கஜூ, ஏலக்காய், பிளம்ஸ், முந்திரியவத்தல் போன்ற பொருட்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

# ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டம்









கல்விப் பொதுத் தராதர உயர் தரம் மற்றும் தரம் 1 முதல் 11ஆம் தரம் வரை கல்விக் கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலம் புலமைப்பரிசில் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

நுவரெலியா, வவுனியாவில் இந்நிகழ்வு, செவ்வாய்க்கிழமை(16) இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ஆ.ரமேஸ், க.அகரன்)

நானுஓயா குறுக்கு வீதியில்

# “நுழையத் தடை; முயற்சிக்க வேண்டாம்”

திவாகரன்

நானுஓயா குறுக்கு வீதியில் கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் எனவும் அதிக விபத்துகள் இடம்பெறுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் எனவே, வீதியினை திறக்க யாரும் முயற்சிக்காதீர்கள் என்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை(16) மாவட்டச் செயலாளர் நந்தன கலபொட தலைமையில் நுவரெலியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த கூட்டத்தில் முக்கிய விடயமாக நானுஓயா- ரதல்ல குறுக்கு வீதியினை மீண்டும் திறந்து கனரக வாகனங்கள் செல்வது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.



நுவரெலியா - தலவாக்கலை ஏ7 பிரதான வீதியின் நானுஓயா - ரதல்ல குறுக்கு வீதியில் கடந்த காலங்களில் ஏற்பட்ட வாகன விபத்துகளில் ஏராளமான உயிரிழப்புக்கள் இடம்பெற்றது. இதன் காரணமாக நானுஓயா - ரதல்ல குறுக்கு வீதியில் 5 தொன்களுக்கும் குறைவான எடையுள்ள வாகனங்கள் மாத்திரம் பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இறுதியாக குறித்த வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 3 சிறுவர்கள் அடங்கலாக 7 பேர் உயிரிழந்தனர்.

ஒரு சிலரின் சுயதேவைக்காக குறித்த வீதியில் திறக்க கோரி கடந்த நாட்களில் நுவரெலியா - தலவாக்கலை தனியார் பேருந்து சாரதிகள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு, தமக்கும் நானுஓயா - ரதல்ல குறுக்கு வீதியில் பயணிப்பதற்கு அனுமதி வேண்டுமென வலியுறுத்தி இருந்தனர்.

இந்த விடயத்தினை நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் முன்வைத்து முக்கிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

குறித்த கூட்டத்தில் தனியார் பேருந்து சங்கத்தின் தலைவர் கூறியதாவது, “நானுஓயா - ரதல்ல குறுக்கு வீதியில் பேருந்து இன்றி பாடசாலை மாணவர்கள் உட்பட ஏராளமானவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன. இதற்காகவே நாங்கள் குறித்த வீதியில் பேருந்து சேவையை ஈடுபடுத்த வேண்டும் என கோரிக்கையை முன்வைக்கின்றோம்” என்றார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமான் கூறியதாவது, குறித்த வீதியில் ஏராளமான விபத்துக்கள் ஏற்பட்டு அதிகமான உயிரிழப்புக்கள் ஏற்பட்டது. இதன் காரணமாக நானுஓயா குறுக்கு வீதியில் 5 தொன்களுக்கும் குறைவான எடையுள்ள வாகனங்கள் பயணிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது. குறித்து வீதியை மீண்டும் திறந்து அதில் ஏற்படும் விபத்துகளுக்கும் உயிரிழப்புக்களுக்கும் யார் பொறுப்பு கூறுவது என்று கேட்ட கேள்விக்கு யாரும் பதிலளிக்காமல் இருந்தனர். எனவே, நானுஓயா குறுக்கு வீதியில் கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும், குறித்த வீதி மிகவும் செங்குத்தாக இருப்பதால் அதிக விபத்துகள் இடம்பெறுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, வீதியினை திறக்க யாரும் முயற்சிக்காதீர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் இணைப்புக் குழுவின் தலைவர் எஸ்.பி.திஸாநாயக்க, மத்திய மாகாண ஆளுநராகச் சட்டத்தரணி லலித் யூ.கமகே, அமைச்சர் ஜீவன் தொண்டமான், மருதுபாண்டி ராமேஸ்வரன், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் ஆகியோரும் சில முக்கிய அரச அதிகாரிகளும் கலந்துகொண்டுள்ளனர்.

# ஓட்டமாவடி நபர் கம்போடியாவில் மரணம்

எச்.எம்.எம்.பர்ஸான்



தொழில் நிமித்தம் சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் இலங்கையிலிருந்து கம்போடியா நாட்டுக்குச் சென்ற, ஓட்டமாவடி 2ஆம் வட்டாரம் ஜீ.எஸ்.வீதியைச் சேர்ந்த நபரொருவர் வியாழக்கிழமை(11) மரணமடைந்துள்ளார்.

மரணமடைந்த நபர், கலேவெல பகுதியைச் சேர்ந்தவரும், ஓட்டமாவடி பகுதியில் திருமணம் முடித்து வசித்து வந்தவருமான 55 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான மௌலவி எம்.எம்.அயூப்கான் என்பவராவார்.

குறித்த நபர் அவரது அறையில் இருந்த நிலையிலேயே மரணமடைந்து சடலமாக மீட்கப்பட்டதாக கம்போடியா நாட்டிலிருந்து தமக்குத் தகவல் கிடைத்ததாக மரணமடைந்த நபரின் குடும்பத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், மரணமடைந்த நபரின் ஜனாஸாவை கம்போடியா நாட்டில் நல்லடக்கம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

# மூன்று சிறுமிகள், சிறுவன் மாயம்





பி.கேதீஸ்

தலவாக்கலை-கிறேட்வெஸ்டன் லூசா தோட்டத்தைச் சேர்ந்த சிறுமிகளான முரளிகிருஷ்ணன் லக்சிக்கா (வயது 16), ராஜகுரு மிதுஷா (வயது 16), சுந்தர்ராஜ் தர்ஷினி (வயது 16), சிறுவன் ராஜகுரு கோபிசாகர் (வயது 15) ஆகியோரை காணவில்லை.

வீட்டிலிருந்து ஞாயிற்றுக்கிழமை (14) மாலை வெளியே சென்றவர்கள் வீடுகளுக்குத் திரும்பவில்லை என அவர்களின் பெற்றோர்களால் தலவாக்கலை பொலிஸில் நிலையத்தில் திங்கட்கிழமை (15) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சிறுவர் உட்பட சிறுமிகள் தமது பெற்றோர்களுக்கு சொல்லாமல் வீட்டிலிருந்து வெளியே சென்று காணாமல் போயுள்ளதாக பெற்றோர்கள் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, இவர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தால் 076-4612289, 077-1546724 ஆகிய இலக்கங்களுக்கு தொடர்புகொள்ளுமாறு பெற்றோர்கள் கோரியுள்ளனர்.

# வர்த்தகர் படுகொலை: ஒருவருக்கு விளக்கமறியல்

திருகோணமலை-உப்புவெளியில் வர்த்தகர் ஒருவரை கடத்தி, படுகொலைச் செய்து கொளுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களில் ஒருவர் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (16) ஆஜர்ப்படுத்தப்பட்ட போது விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வருகைதந்த சந்தேகநபர்கள், திருகோணமலை-அலஸ் தோட்டத்தைச் சேர்ந்த 41 வயதான செல்லையா ஜெயரூபன் என்ற வர்த்தகரை அவரது வர்த்தக நிலையத்திற்குள் சென்று தாக்கியுள்ளதுடன் அவருடைய கெப் வாகனத்திலேயே கடத்திச்சென்று மொரவெவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பம்மட்டவச்சி காட்டுப்பகுதியில் எரித்துள்ளனர்.

இந்த சம்பவம் கடந்த 13ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. படுகொலையுடன் தொடர்புடைய 3 சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மற்றைய இருவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்த உப்புவெளி பொலிஸார், தனிப்பட்ட தகராறினால் இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்றனர்.

# மில்கோவை விற்காதீர்



வ.சக்தி

மில்கோ பால் சேகரிப்பு நிறுவனத்தைத் தனியாருக்கு வழங்க வேண்டாம் என கூறி பால் பண்ணையாளர்கள் செவ்வாய்க்கிழமை(16) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுவரை காலமும் எவ்வித தடைகளும் இன்றி, மில்கோ பால் சேகரிப்பு நிலையத்திற்கு நாம் பாலை வழங்கிக் கொண்டு வருகிறோம், மில்கோ நிறுவனம் எமக்குரிய கொடுப்பனவுகளை வாராந்தம் முறையாக வழங்குகிறது.

அத்துடன், எமக்குப் பிள்ளைகளின் கற்றல், மரணச் செலவு, திருமணச் செலவு, உள்ளிட்ட பல செலவுகளுக்கும் மில்கோ நிறுவனத்தின் மேலதிக உதவிகளை நல்கி வருகின்றனர்.

இவ்வாறான நிறுவனத்தை தனியாருக்கு வழங்குவதை நாம் முற்றாக எதிர்கிறோம்.

எனவே, இந்த விடயத்தைக் கருத்தில் கொண்டு மில்கோ நிறுவனத்தைத் தனியாருக்கு வழங்குவதை நிறுத்தா விட்டால் எமது போராட்டம் மேலும் தொடரும் என இதன்போது பாற் பண்ணையாளர்கள் கருத்து தெரிவித்தனர்.

# வீதியில் கவிழ்ந்தது முச்சக்கரவண்டி



பொகவந்தலாவ நகரின் ஊடாக பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று திங்கட்கிழமை (15) பிரதான வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

பொகவந்தலாவ நகரில் உள்ள பாலத்திற்கு அருகில் வைத்து வீதியின் குறுக்கே நாய் ஒன்று ஓடியுள்ளதுடன், முச்சக்கரவண்டி சாரதி அதை காப்பாற்ற முற்பட்டபோது, முச்சக்கரவண்டி வீதியில் கவிழ்ந்துள்ளது.

விபத்தில் முச்சக்கரவண்டி பாரியளவில் சேதமடைந்துள்ளதுடன், எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சில்லறை தட்டுப்பாடுகளும் சின்னத்தனமான சிந்தனைகளும்

பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பஸ்களில், குறுகிய தூரங்களுக்குப் பயணிக்கும் பயணியொருவர், தன்னுடைய பயண தூரத்துக்கு உரியக் கட்டணத்தைச் செலுத்தாது, அதற்குக் கூடுதலான தொகைக்கு உரிய பணத் தாளைக் கொடுத்து விட்டால், இறங்கும் வரையிலும் நிம்மதியாகவே இருக்கமாட்டார்.

சிலவேளைகளில், இறங்க வேண்டிய தருணத்தில் மறந்துவிட்டு, மிகுதி பணத்தைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளாது இறங்கிவிடுவார். அந்த பஸ், ஓடி மறைந்ததன் பின்னரே மிகுதி பணம் ஞாபகத்துக்கு வரும். மிக அவசர, அவசரமாகப் பணத்தைப் பிடுங்கிக்கொள்ளும் நடத்துநர்களில் பலரும் பயணிகளை ஏமாற்றவே முயற்சிப்பர்.

இரண்டொரு பஸ் தரிப்பிடங்கள் கடந்தவுடன், பயணிகளை முன் கதவு பக்கமாக இறங்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தும் நடத்துநர்கள் பலரும் பின் கதவு பக்கத்திலேயே நின்றுகொள்வார்கள். மிகுதி பணத்தைக் கொடுக்கவேண்டிய பயணிகள் இறக்குவதை அறிந்து கொண்டதன் பின்னர், பஸ்ஸின் நடுவுக்குச் சென்று சிக்கிக்கொள்வர். இவையெல்லாம். சில நடத்துநர்களின் சில்லறைத் தனமான தந்திரமாகும்.

பஸ் கட்டணங்களைத் திருத்தும் போதும், அல்லது அதிகரிக்கும் போதும், 5 ரூபாய்க்கு குறைவாக மிகுதி படும் வகையில் தீர்மானிக்கக்கூடாது. இதில், பெரும்பாலும் பயணிகளே நட்டமடைகின்றனர். உதாரணமாக ஆரம்பக் கட்டணமாக 38 ரூபாய் இருக்குமாயின், அதற்காக 40 ரூபாயை கொடுத்தால், மிகுதி இரண்டு ரூபாய் கிடைக்காது. 50 ரூபாயைக் கொடுத்தால் 10 ரூபாயே மிகுதி கிடைக்கும்.

சரி, பொதுப் போக்குவரத்தில் பயணிப்போர், ஏன்? சில்லறைகளை கொண்டுசெல்லக்கூடாது என பலரும் கேள்வியெழுப்பலாம். 5 ரூபாய்க்கு குறைவான தொகையில் எந்தவொரு பொருளையும் நமது நாட்டில் கொள்வனவுச் செய்யமுடியாது. அந்தளவுக்கு நாட்டின் பண வீக்கம் அதிகரித்துள்ளது. இதற்கிடையில் சில்லறைகளுக்கும் கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது.

5, 10 ரூபாய் சில்லறைகளைத் தவிர, ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் சில்லறைகளைக் காணக்கிடைப்பதே அரிதாகும். இவ்வாறான நிலையில், புழக்கத்தில் இருக்கும் பணத் தாள், சில்லறைகளுக்கு ஏற்றவகையில் தொகையொன்றை நிர்ணிக்காது, இடையில் ஒருதொகையை நிர்ணயிப்பதன் ஊடாக, நடத்துநருக்கும் பயணிக்கும் இடையில் மோதலை உருவாக்கவே முயலுகின்றனர்.

எரிபொருட்களின் விலைகள் திருத்தப்பட்டதன் பின்னர், போக்குவரத்து கட்டணங்களும் திருத்தப்பட்டுள்ளன. அத்துடன், சமையல் எரிவாயு விலையும், மின் கட்டணங்களும் குறைக்கப்பட்டுள்ளன. இவற்றின் பயன்களை இனியாவது பொதுமக்கள் அனுபவிக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும்.

உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகளில் உணவுப்பொருட்களின் விலைகள் குறைக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், எத்தனைப் பேர் விலைகளைக் குறைத்துள்ளனர் என்பதைக் கண்காணிக்கவேண்டும். அத்துடன், நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும் உணவுப்பொருட்களின் தரங்களையும் சோதனைக்கு உட்படுத்தவேண்டும்.

பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு, சேவைகளின் கட்டணங்கள் குறைக்கப்படும் போது, அவற்றின் பயன்களைச் சாதாரண பொதுமக்கள் அனுபவிக்க முடியவில்லையெனில். அதனால் எவ்விதமான பிரயோசனமும் இல்லை. விலை அதிகரிப்பை பெரும் முதலைகள் எவ்வாறு விழுங்கிக்கொள்கின்றனவோ, அவ்வாறே சில்லறைகளையும் விழுங்கிக்கொள்கின்றன. அதில் கவனம் செலுத்தவேண்டியது உரிய தரப்பினரின் பொறுப்பாகும்.

தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## ஜனாதிபதித் தேர்தலுக்கு

# மற்றொரு தடை போட முயற்சி



எம்.எஸ்.எம்.ஐயூப்

ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து வருடங்கள் அல்ல, ஆறு வருடங்கள் என்று தீர்ப்பளிக்குமாறும் அதுவரை ஜனாதிபதித் தேர்தலை நடத்தக் கூடாது என்று தேர்தல் ஆணைக்குழுவுக்கு கட்டளையிடுமாறும் கோரி, கடந்த 3ஆம் திகதி சி.டி.லேனவ என்ற சட்டத்தரணியால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் கடந்த 8ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமலேயே நிராகரித்தது.

அதேபோல், அருண லக்சிறி உணவட்டுன என்ற மற்றொரு சட்டத்தரணியும் கடந்த 12ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் அதேபோன்றதோர் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்தார். 19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தி முறையாக நிறைவேற்றப்படவில்லை என்பதே அவரது வாதமாகியது.

சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தி முறையாக அதனை நிறைவேற்றும் வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்தக் கூடாது என்று கட்டளையிடுமாறும் அவர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தார். அதனையும் நீதிமன்றம் கடந்த 15ஆம் திகதி (கடந்த திங்கட்கிழமை) நிராகரித்தது.

சட்டப்படி, இவ்விரண்டு மனுக்களையும் உயர் நீதிமன்றம் கருத்தில் கொள்ளவே முடியாது என்பதை சட்டத்தரணிகளான சம்பந்தப்பட்ட மனுதாரர்கள் அறிந்திருக்க வேண்டும். ஏனெனில், இவ்விரண்டு மனுக்கள் மூலமும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றே அவர்கள் கோரியிருக்கின்றனர். அவ்வாறு நிறைவேற்றப்பட்ட சட்டங்களை மீள்பரிசீலனை செய்ய இலங்கையில் அமுலில் உள்ள எந்தவொரு சட்டத்திலும் இடமில்லை.

2017 மாகாண சபைகள் விடயத்தில் கலப்பு தேர்தல் முறையை அறிமுகப்படுத்திய சட்டம் முறையாக நிறைவேற்றப்படவில்லை என்றும் எனவே, அந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்றும் கோரி முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார். பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமொன்றை மறுபரிசீலனை செய்யும் அதிகாரம் தமக்கு இல்லை என்று நீதிமன்றம் அம்மனுவை நிராகரித்தது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் அல்லது ஒக்டோபர் மாதம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்றும் அல்லது ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை போட்டியின்றி அப்பதவிக்குத் தெரிவு செய்யும் வகையில் ஏனைய வேட்பாளர்கள் ஒதுங்கிக்கொள்ள வேண்டும் என்றும் ரணிலின் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்கள் கடந்த வருடம் ஆரம்பத்திலிருந்தே கோரி வரும் நிலையிலேயே இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

எனவேதான், பின்னால் இருந்து இம்மனுக்களை இயக்கியவர் ரணில் விக்ரமசிங்கவே என்று எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர்.

தமக்கும் லேனவவின் மனுவுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள் என்றே தாமும் நம்புவதாகவும் ரணில் கடந்த 4ஆம் திகதி கூறியிருந்தார். எனினும், எதிர்க்கட்சிகள் இன்னமும் அவர் கூறியதை நம்புவதாகத் தெரியவில்லை. மற்றைய மனுவைப் பற்றி ஜனாதிபதியோ அரசாங்கமோ அல்லது ஐக்கிய தேசிய கட்சியோ எதையும் கூறவில்லை.

இச்சட்டத்தரணிகளின் மனுக்களுக்குப் புறம்பாக ஜனாதிபதித் தேர்தலைப் பாதிக்கக்கூடிய வகையில் அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்தாண்டுகள் என்ற போதிலும், அது ஆறு வருடங்கள் என்ற அர்த்தத்தை வழங்கக் கூடிய வாசகம் ஒன்று அரசியலமைப்பில் இருப்பதாகவும் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட போது, அது மாற்றப்படவில்லை என்றும் அதனை முறையாகத் திருத்தி ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து வருடங்கள் என்பதை உறுதிப்படுத்துவதே இந்த அரசியலமைப்புத் திருத்தத்தின் நோக்கமாகும் எனவும் அரசாங்கமும் ஐ.தே.கவும் கூறுகின்றன.

லேனவ என்ற சட்டத்தரணியின் மேற்படி மனு நிராகரிக்கப்பட்டதற்கு மறுநாளே அதாவது கடந்த 9ஆம் திகதி இந்த அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான பிரேரணையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே அதனை அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் முறையாக நிறைவேற்றப்படவில்லை என்பதை இந்த சட்டத்தரணிகளும் ஐ.தே.க.வும் இம்முறை ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிய போதே உணர்ந்துள்ளனர் போலும். அதுதான் இங்குள்ள விசேட அம்சமாகும். அந்த இரண்டு மனுக்களும் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டதால் உத்தேச அரசியலமைப்புத் திருத்தத்தையே நாம் இங்கு ஆராயப் போகிறோம்.

ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து வருடங்கள் என்று அரசியலமைப்பின் 30(2) வாசகம் கூறுகிறது. பாராளுமன்றத்தின் பதவிக் காலம் ஐந்து வருடங்கள் என்று 62(2) வாசகம் கூறுகிறது.

ஆனால், ஜனாதிபதியினதோ அல்லது பாராளுமன்றத்தினதோ பதவிக் காலத்தை 'ஆறு வருடத்துக்கு' மேல் நீடிப்பதற்கான திருத்தம் ஒன்றை முன்வைப்பதாக இருந்தால், அதற்குப் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுக்கு மேலதிகமாக சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலம் மக்கள் அதற்கு தமது ஒப்புதலை வழங்க வேண்டும் என்று அரசியலமைப்பின் 80 (இ) வாசகம் கூறுகிறது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து வருடங்கள், ஆனால், அதனை 'ஆறு வருடங்களுக்கு மேல் நீடிப்பதற்கு' சர்வஜன வாக்கெடுப்பு வேண்டும் என்று ஏன் கூற வேண்டும்? அது பொருத்தமில்லை. அது 'ஐந்து வருடங்களுக்கு மேல் நீடிப்பதற்கு' என்றே கூறப்பட வேண்டும்.

அவ்வாறில்லாமல், 'ஆறு வருடங்களுக்கு மேல் நீடிப்பதற்கு' என்று கூறும் போது, ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறு வருடங்கள் என்றும் அர்த்தம் வழங்கப்படுகிறது. எனவே, பதவிக் காலத்தை நீடிப்பதைப் பற்றிக் கூறும் 83 (இ) வாசகத்தில் 'ஆறு வருடங்கள்' என்பதற்குப் பதிலாக 'ஐந்து வருடங்கள்' என்ற சொற்களைச் சேர்ப்பதே இந்த அரசியலமைப்புத் திருத்தத்தின் நோக்கமாகும் என்று அரசாங்கம் கூறுகிறது. அது நியாயமான வாதம் தான்.

ஆறு வருடங்களாக இருந்த ஜனாதிபதியின் பதவிக் காலம் 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலமே ஐந்து வருடங்களாகக் குறைக்கப்பட்டது. 19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைத் தயாரித்தவர்களும் அதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய பாராளுமன்ற உறுப்பினர்களும் அதற்கமைய 83 (இ) வாசகத்தைத் திருத்தத் தவறியுள்ளனர் என்றே கருத வேண்டியுள்ளது. அது அப்போது மட்டுமல்லாது 2020ஆம் ஆண்டு 20ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்ட போதும், 2022ஆம் ஆண்டு 21ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்ட போதும் கவனிக்கப்படவில்லை என்பதும் தெளிவாகிறது.

சட்டத்தரணி லேனவ இந்தக் காரணத்தின் அடிப்படையிலேயே தமது மனுவைச் சமர்ப்பித்து இருந்தார். அதாவது 83 (இ) வாசகத்தின் படி, ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறாண்டுகள் என்று வாதிடலாம் எனவே, அதனை ஏற்று ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அவரது கருத்தாகியது.

ஆனால், 83 (இ) வாசகத்தில் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறு ஆண்டுகள் என்பது தெளிவாகவே கூறப்படவில்லை. ஆயினும், 30 (2) வாசகத்தில் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்தாண்டுகள் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. தெளிவாகக் கூறப்படாத ஒரு கருத்தை ஏற்றுத் தெளிவாகக் கூறப்பட்ட ஒரு கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றே அவர் வாதிட்டார். அதனை நீதிமன்றம் ஏற்கவில்லை.

இங்கு இரண்டு விடயங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. 83 (இ) வாசகத்தின் படி, ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறு வருடங்கள் என்று ஏற்றுக் கொள்வது பிழையாகும். அது ஆறு வருடங்களுக்கு மேல் பதவிக் காலத்தை நீடிப்பதாக இருந்தால் சர்வஜன வாக்கெடுப்பொன்றையும் நடத்த வேண்டும் என்றே கூறுகிறது. அவ்வாறாயின் ஐந்து வருடங்களாக இருக்கும் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 'ஆறு வருடங்களுக்கு மேல்' நீடிக்காது 'ஆறு வருடங்கள்' வரை நீடிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பொன்று தேவையில்லையா என்ற கேள்வி எழுகிறது.

ஆயினும், அந்த வகையிலும் ரணில் விக்ரமசிங்கவின் பதவிக் காலத்தை நீடிக்க முடியுமா என்பது சந்தேகமே. ஏனெனில், பதவி துறந்த ஜனாதிபதி ஒருவரின் வெற்றிடத்தை நிரப்பத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஒருவர், பதவி துறந்த ஜனாதிபதியின் பதவிக் காலத்தில் மீதமாக உள்ள காலத்துக்கு 'மட்டுமே' பதவியியல் இருக்கலாம் என்று அரசியலமைப்பில் 40 (1) (அ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சரி, அதனையும் மாற்றலாம் என்று வைத்துக்கொள்வோம். ஆயினும், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படாமல் மேலே கூறப்பட்டதைப் போல், ஆறு வருடங்கள் வரை பதவிக் காலத்தை நீடிப்பதற்கும் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும். அதற்கு தற்போதைய பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைக்குமா என்பது சந்தேகமே.

83 (இ) வாசகத்தில் ஆறு வருடங்களுக்கு மேல் என்பதை ஐந்து வருடங்களுக்கு மேல் என்று மாற்றுவதற்கென அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பு திருத்தமும் பாராளுமன்றத்துக்கு வருமுன் உயர் நீதிமன்றத்தினால் ஆராயப்பட வேண்டும். அப்போது எவரும் மனுக்கள் மூலம் அதில் தலையிடலாம். அந்த இடத்தில் ஐ.தே.க. என்ன செய்யப் போகிறதோ தெரியாது. ஏனெனில், இவ்வளவு காலம் கவனத்திற்கொள்ளப்படாத இந்த சொல் முரண்பாட்டை ஜனாதிபதித் தேர்தலொன்று நடத்தப்படப்போகும் இத்தருணத்தில் அக்கட்சி ஏன் தூக்கிப் பிடிக்க வேண்டும்?



## வாழ்வியல் தரிசனம்

"நானும் நீயும் வேறல்ல" சகல கோள்களும் பிரபஞ்சத்தினுள் அடக்கம். இந்தப் பாரிய வெளியான ஆகாயத்தில் கோள்கள், வால் வெள்ளிகள் எல்லாமே சுற்றியபடி, நீந்துமாற்போல் இயங்கிய வண்ணமாக இருக்கின்றன. இதனுள் உள்ள துகள்களில் தானே தேகங்களை உருவாக்குகின்றன.

உடல் அழிவதும், ஆன்மா வேறு உடல் வடிவம் பெறுவதாகச் சொல்லப்படுகின்றது. மேலும், உலகில் வாழும் மனித உடல்களுடன் காற்றுத் துகள், உட்பட கோடிக்கணக்கான அணுக்களின் வியாபகங்கள், உலகம் பூராகவும் சகல உயிர்கள், தாவரங்கள், விலங்குகள், உட்பட எல்லாமே எங்குமிருப்பது புதுமையல்ல.

மூச்சுகள் எல்லா உயிர்களில் நடக்கும். இவை மட்டுமல்ல, எல்லாமே உலகை இணைக்கின்றன. எனவேதான் இந்த அணுச் சேர்கையினால் "நானும் நீயும் வேறல்ல" என்று உணருவது ஆச்சரியம் அல்ல. பேரண்டத்தில் உள்ளதே இந்த தேகத்திலும் வந்துசேரும். எல்லா உயிரினங்களுமே ஒன்றுக்கொன்று தொடர்புபட்டவை.

- பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

# தேன்தமிழை பாருங்கள்



திருகோணமலை நகர்ப்பகுதியான உவர்மலையில் அமைந்துள்ள தேன்தமிழ் வீதியானது மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது. குறித்த வீதியானது உயரமான பகுதியில் அமைந்துள்ளமையால் அதில் பயணிக்கும் வாகனங்கள் கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளாகும் அபாயமுள்ளது.

குறித்த வீதியில் நடந்து செல்வதும் கடினமாகவுள்ளதால் அங்கு வாழும் மக்கள் தமது வாகனங்களை வீதியின் மேற் பகுதியில் வைத்துச் செல்கின்றனர். இதனால் வாகனங்கள் களவாடப்படுவதற்கான அபாயம் உள்ளதோடு தினமும் பணிக்குச் செல்பவர்கள் கடும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அப்பிரதேச மக்கள் குறித்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு திருகோணமலை நகரசபைக்கு பலமுறை கோரிக்கை விடுத்துள்ளனர். எனினும், இப்பணியானது தொடரப்படாதுள்ளது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் முகமாக உவர்மலை தேன்தமிழ் வீதியைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

- ச.தனுஷ்கா



# வீதிகளில் மடியும் உயிர்களை காப்போம்



திருச்செல்வம் ஜனனி,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



மனிதர்களின் அன்றாட வாழ்க்கையில் வீதி விபத்துக்கள் சர்வசாதாரண விடயதானமாக மாறி விட்டது. மக்களின் விரைவான வாழ்க்கை ஓட்டத்தாலும் அக்கறையற்ற செயற்பாடுகளினாலும் அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. இவற்றை எமது கண்ணூடாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் 2024ஆம் ஆண்டு கருத்தின்படி, வீதி விபத்துக்களால் 4.4 மில்லியனுக்கு அதிகமான மக்கள் இறக்கின்றனர். இலங்கையில் வருடாந்தம் 1.3 மில்லியனுக்கு உட்பட்டோர் அதிக காயங்களுக்கு உள்ளாகின்றனர்.

## SH வீதி விபத்துக்கள் என்றால் என்ன?

வீதியில் செல்லும் வாகனங்கள் ஒன்றின் மூலம் ஏற்படுத்தக்கூடிய விபத்துக்கள், வீதியில் பயணம் செய்யும் இரு வாகனங்களுக்கு இடையிலான விபத்துக்கள், வேறொரு சடப் பொருட்களுடன் ஏற்படுத்தக்கூடிய விபத்துக்கள் போன்றவற்றை நாம் வீதி விபத்துக்கள் எனலாம்.

## SH வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணங்கள்

அதிகமான வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கு சாரதிகளின் கவனமின்மையே பிரதான காரணமாக விளங்குகின்றது. மதுபோதை மற்றும் தொலைபேசி உரையாடலில் ஈடுபட்டுக்கொண்டு வாகனங்களைச் செலுத்துதல், போக்குவரத்து சட்டதிட்டங்களை மதிக்காமல் தூக்கமின்றி தொடர்ச்சியாக வாகனங்களைச் செலுத்துதல், முன்னாள் பின்னால் வரும் வாகனங்களுடன் போட்டிப் போட்டு வாகனத்தைச் செலுத்துதல், வாகனங்களில் ஏற்படக்கூடிய கோளாறுகளை பழுதுபார்க்காமல் ஓட்டுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பயணிகளின் கவனமின்மை எனும்போது, போக்குவரத்து சட்ட திட்டங்களை மதிக்காது செயற்படல் தவறாகப் பாதையைக் கடத்தல் மற்றும் வீதிகள் குண்டும் குழியுமாக இருத்தல், கால்நடைகள் குறுக்கால் வரல் போன்றவற்றை வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கான பிரதான காரணங்களாகும்.

இவ்வாறாகத் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருக்கும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பிரதான வீதிக்கு அருகாமையில் பாதுகாப்பான நடைபாதையினை அமைப்பது மற்றும் பிரதான வீதியில் ஏற்படுகின்ற விபத்துக்களை இழிவளவாக்கம் செய்யலாம்.

நாற்சந்திகள் மற்றும் வீதிகளின் வளைவுகளில் ஒளி சமிக்ஞை விளக்குகளைப் பொருத்துதல், வீதியோரங்களில் ஒளி சமிக்ஞை குறியீடுகள் சரியான அறிவித்தல் பலகைகளைக் காட்சிப்படுத்தல், பாதசாரி கடவைகள் (மஞ்சள் கோடு) உள்ள இடத்திலிருந்து 30 அடிக்கு முன்னால் அதற்கான எச்சரிக்கை வகுத்தல், பாடசாலைகள் சிறுவர்கள் பூங்காக்கள் போன்ற இடங்களில் மேலான பாதசாரி கடவையில் அமைத்தல் முக்கியமானதாகும்.

கடுமையான போக்குவரத்து சட்டங்களை நடைமுறைப்படுத்தல், வீதி ஒழுங்குமுறை சட்டங்கள் தொடர்பாக மக்களுக்கு பொது விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அதாவது சமூகத்தில் இருக்கும் அடித்தட்டு மக்களும் விளங்கிக் கொள்ளும் வகையில் இங்குத் தகவலானது காட்சிப்படுத்த வேண்டும். வீதி நாடகங்கள். கருத்துப் பட்டறைகள் போன்று உத்தி முறைகளினைக் கையாண்டு அரசாங்கம் அறிவிக்க வேண்டும்.

பாதுகாப்பான வாகனங்களின் பயன்பாடு, வீதி விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்வதற்குப் பாதுகாப்பான வீதி வடிவமைப்பதுடன். வாகனங்களின் பாதுகாப்பை உறுதி செய்வது என்பது இன்றியமையாத ஒன்றாகும்.
அந்த வகையில், வாகனங்களையும் அதன் உதிரிப்பாகங்களையும் அடிக்கடி சரிபார்த்த பின்னரே வாகனங்களைச் சரிபார்த்து ஓட்டுதல் வேண்டும், சாரதிக்கான முறையான பயிற்சியையும் அனுமதித்தும் வழங்குதல், சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவது என்பது ஒழுங்கற்ற முறையிலான நடத்தைகள் மூலம் நடைபெறுகின்றன.

முறைசார்ந்த எழுத்துப் பயிற்சி இன்றி சட்ட விபரீதங்கள் நடைபெறுகின்றமை, இலஞ்சம் வழங்கல்கள் முறையான சாரதி ஒருவருக்கு உடல்நலன் சார் குறைபாடுகள், வீதி தொடர்பான எழுத்தறிவு இன்மை மற்றும் வாகன ஓட்டம் முழுமையான பயிற்சி அனுபவம் என்பனவற்றைச் சரியாக உள்ளதா என்பதனை உறுதி செய்ய வேண்டும்.

வீதி விபத்துக்கள் ஏற்படும் இடங்கள் பற்றி தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு மேற் கொள்ளல். தொடர்ச்சியாக விபத்துக்கள் ஏற்படுகின்ற இடங்களுக்கு ஊடகவியலாளர்கள் நேரடியாகக் களத்திற்குச் சென்று தகவல்களை அல்லது தரவுகளைச் சேகரித்து அதனை பொலிஸாரின் பகுப்பாய்வினை மேற்கொண்டு சரியான நம்பகமான உறுதியான தகவல்களை எடுத்து அதற்கு மாற்றான வழிமுறைகளினை நடைமுறைப்படுத்த வேண்டும்.

வீதிப் போக்குவரத்து தொடர்பாகப் போக்குவரத்து பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி பத்மநாதன் சிறிலவனிடம் வினாவிய போது, "நாம் பயணத்தை இலகுவாக்குவதற்கும், நம் தேவைகளை விரைவில் பூர்த்தி செய்வதற்கும் பயன்படுத்துவது என்பது, நாம் அறிந்த ஒன்று. ஆனால், இன்றைய நவீன உலகில் அதனை ஆடம்பரத்திற்கும் அழகுக்கும் பயன்படுத்தும் பொருளாகி விட்டது" என்றார்.

வீதியில் நாம் செய்யும் தவறுகளால் நமக்கு மட்டுமல்லாது பிறருக்கும் சொத்துக்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதை ஒவ்வொரு பயணிகளும் அறிந்திருக்க வேண்டும். தமது தொழில் வாழ்வில் ஆதவன் போல் செயல்படும் மக்கள் கூட்டத்தினர் வீதி என்று வந்தால் வீதி சட்டங்களை கருத்தில் கொள்ளாத அறிவில்லாதவர்கள் ஆகிவிடுகின்றார்கள். சாரதி, அனுமதிப்பத்திரம் பற்றித் தெரிந்திருப்பீர்கள் சாரதி பத்திரத்தில் நான்கு கேள்விகள் கேட்கப்பட்டிருக்கும் அதில் நான்கு விடைகள் தந்திருப்பார்கள்.

தலைக்கவசம் எதற்காக அணியப்படுகின்றது? என்று அதற்குப் பதில் தலையைப் பாதுகாக்க வேண்டும் என்பதே ஆகும். ஆனால், அதில் எத்தனை பேர்கள் அதை கடைப்பிடிக்கிறார்கள் என்னமோ தெரியவில்லை. நமது நாட்டில் வீதி போக்குவரத்து சட்டங்களைக் கடைப்பிடித்துப் பின்பற்றுவது வீதியில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நிற்பார்கள் என்ற பயத்தினால் தான் என்பது ஏற்க முடியாத ஒன்றாகும்.

சிலர் சிறு பிள்ளைகளுக்குத் தலைக்கவசம் அளிக்காது அழைத்துச் செல்வர். ஏன் அவர்களுக்குத் தலைக்கவசம் அணியவில்லை என கேட்டால், சிறுபிள்ளை என்பதால் தலைக்கவசம் அணியவில்லை என்பார்கள். சிறு பிள்ளைகளும் எம்மை போல உயிருள்ளவர்கள் தான். ஒவ்வொரு பயணிகளும் அதை உணர்ந்து செயல்பட வேண்டும். இன்னும் சிலர் வீதிக் கடவைகளில் முந்தி செல்ல முயற்சிப்பார்கள். ஏன் அப்படிச் செல்கிறீர்கள் என கேட்டால், வீதியில் பாதையைக் கடக்க யாருமில்லை. அதனால்தான் அப்படிச் செல்கிறோம் என சொல்வார்கள்.

வீதியில் சமிக்ஞைகள், சைகைகள், குறியீடுகள் எதற்காகப் போடப்பட்டுள்ளது என்பதில் என்பதை வீதியில் சகலரும் அறிந்திருப்பது அவசியமாகும், நமது நாட்டில் சில திருத்தப்படாத வீதி சட்டங்களால் வாகன ஓட்டுநர்கள் செய்யும் செயல்களுக்குச் சலுகைகளும் கிடைக்கப் பெறுகின்றது. இதைத்தடுப்பது அவசியமாகும்.

வீதி விபத்துகளால் நாளொன்றுக்கு எத்தனை உயிரிழப்புகள், எத்தனை சொத்து இழப்புகள் ஏற்படுகின்றன. இவற்றைக் கருத்தில் கொண்டு செயல்படுவது ஒவ்வொரு தனிமனிதனின் கடமையாகும். என்று சரியான வீதி சட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு ஒவ்வொரு மனிதர்களும் சரியாக கடைப்பிடித்து ஒழுகவேண்டும்.





## சான்றிதழ் வழங்கி வைப்பு

100 மணித்தியாலங்களைக் கொண்ட இரண்டாம் மொழி சிங்களப் பயிற்சி நெறி பூர்த்தி செய்த யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் பரிசோதகர், சுகாதார உதவியாளர்கள் மற்றும் சாரதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை(14) நடைபெற்றது.

– எம்.றொசாந்த்







## அபிவிருத்தி தேசிய வாரம்

வீதிப் போக்குவரத்து பாதுகாப்பு பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள் பற்றி முன்பள்ளி பிள்ளைகளுக்கு அறிமுகம் செய்துவைத்தல் நிகழ்வு, திருகோணமலை, உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் செவ்வாய்க்கிழமை (15) நடைபெற்றது.
இந்நிகழ்வு, முன் பிள்ளைப் பருவ பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தேசிய வாரத்தினை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்டது.

– அ.அச்சுதன்





## விழிப்புணர்வு செயற்றிட்டம்

கிழக்கு மாகாணத்தில் போதைப்பொருள் பாவனையைத் தடுக்கும் விழிப்புணர்வு செயற்றிட்டத்தைக் கல்வி அமைச்சுடன் இணைந்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்து வைத்தார்.
முதல் கட்டமாக செவ்வாய்க்கிழமை (15) அன்று இடம்பெற்ற விழிப்புணர்வு நிகழ்வு, மூதூர் சோனையூர் கல்லூரி, ஸ்ரீ சன்பகா வித்தியாலயம், இலங்கைத்துறை முகத்துவாரம் இந்து கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இடம்பெற்றது. இதில் சுமார் 1,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர்.

– எம்.எஸ்.எம்.ஸாகிர்





## பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு

சம்மாந்துறை நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலய பிரிவுக்குட்பட்ட 14 விவசாய அமைப்புக்களின் சம்மேளனமான பட்டம்பிட்டி திட்ட முகாமைத்துவ குழு ஏற்பாடு செய்த சம்மாந்துறை பிரதேச புதிய நீர்ப்பாசன பொறியியலாளருக்கான வரவேற்பும், கௌரவிப்பும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (14) நெய்னா காடு பிரதேசத்தில் பட்டம்பிட்டி திட்ட முகாமைத்துவ குழுவின் தலைவரும், திருகோணமலை மாவட்ட பிரதம உள்ளக கணக்காய்வாளருமான ஏ.எல்.மஹ்ரூப் தலைமையில் இடம்பெற்றது.
இதன்போது சம்மாந்துறை நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலய பிரிவுக்குட்பட்ட 14 விவசாய அமைப்புக்கள், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கலந்துரையாடிய விவசாயிகள் அவற்றுக்கான தீர்வை பெற்றுத்தர வேண்டிய விடயங்களையும் எடுத்துரைத்தனர்.

– நூருல் ஹுதா உமர்



## கோல் கம்பங்கள், பந்துகள் வழங்கல்



கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியின் மாணவர்களின் விளையாட்டு மேம்பாட்டிற்காகக் குறித்த கல்லூரியின் பழைய மாணவர்கள் 95,000 ரூபாய் பெறுமதியான கோல் கம்பங்கள், உதை பந்துகள் என்பவற்றை அன்பளிப்பாக செவ்வாய்க்கிழமை (15) வழங்கினர்.
மாணவர்களுக்கான உபகரணங்களை வழங்கி உள்ள நிலையில் உதை பந்து பயிற்றுநர் ஒருவரையும் நியமித்து அவருக்கான சம்பளத்தினையும் பழைய மாணவர் அணி வழங்கி வருகின்றனர். கல்லூரியில் உடற்கல்வி ஆசிரியர் மற்றும் பயிற்றுநர்கள் இல்லாத நிலையில் பயிற்றுநரை வழங்கி இருப்பது மாணவர்களுடைய விளையாட்டுக்கு மிகவும் பொருத்தப்பாடு உடையதாக அமைந்துள்ளது.

– நடராசா கிருஸ்ணகுமார்

விழுப்புரம்

சிறுமிகள் வன்புணர்வு வழக்கில்

# 15 பேருக்கு 20 ஆண்டுகள் சிறை

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே இரண்டு சிறுமிகள் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் 15 பேருக்கு தலா 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிப்பதாக போக்சோ நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

2019ஆம் ஆண்டு திண்டிவனம் அருகே இரண்டு சிறுமிகள் கூட்டு பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக 15 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்கள் மீதான வழக்கு போக்சோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

விசாரணை முடிந்த நிலையில், இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி, “கைது செய்யப்பட்டவர்களை குற்றவாளி என அறிவித்து, அனைவருக்கும் தலா 20 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது” என தீர்ப்பளித்தார்.



சென்னை

மனைவியை பிரிந்த விரக்தியால்

# குழந்தையை கொன்று கணவர் உயிர்மாய்ப்பு

பூந்தமல்லி அருகே மனைவி பிரிந்து சென்ற விரக்தியில் 5 வயது மகளை கொலை செய்து விட்டு கணவர் தன்னுயிரை மாய்த்து கொண்ட சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பூந்தமல்லியை அடுத்த சென்னீர்க்குப்பம் வாணியர் தெரு பகுதியைச் சேர்ந்தவர்கள் மோகன் (32) பரிமளா (28). தம்பதியர். இவர்களுக்கு நட்சத்திரா (5) என்ற மகள் இருந்தார்.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை (16) காலை வீட்டிலிருந்து மோகனும், அவரது குழந்தையும் வெளியே வராதால் சந்தேகமடைந்த அக்கம் பக்கத்தினர் பூந்தமல்லி



பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலறிந்து வந்த அவர்கள், கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது இருவரும் சடலமாக மீட்கப்பட்டனர்.

விசாரணையில் மோகனின் மனைவி பரிமளா கடந்த சில மாதங்களுக்கு முன்பு அவரது உறவினர் ஒருவருடன் சென்று விட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், சம்பவத்தன்று மோகன் மனைவி இருக்கும் இடத்திற்குச் சென்று அவருடன் சண்டை போட்டு மகளை அழைத்து வந்துள்ளார்.

இதையடுத்து மன உளைச்சலில் இருந்த மோகன், குழந்தைக்கு விஷம் கொடுத்து கொலை செய்துவிட்டு, அவரும் வீட்டில் தூக்கிட்டு தன்னுயிரை மாய்த்து கொண்டிருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் குறித்து பூந்தமல்லி பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

கரூர்

நில மோசடி வழக்கில்

# அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கைது

ரூ.100 கோடி நில மோசடி புகாரில், தலைமறைவாக இருந்த அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கரை சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் கேரளாவில் வைத்து செவ்வாய்க்கிழமை (16) கைது செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கரூர் மாவட்டம்-மண்மங்கலம் தாலுகா குப்பிச்சிபாளையத்தை சேர்ந்த பிரகாஷ், கரூர் எஸ்.பி., அலுவலகம் மற்றும் பொலிஸ் நிலையத்தில் அளித்த புகாரில், “தனக்கு சொந்தமான ரூ.100 கோடி மதிப்பு நிலத்தை எம். ஆர்.விஜயபாஸ்கர் போலியாக பத்திரப்பதிவு செய்து கொலை



மிரட்டல் விடுத்தார்”என தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மாவட்ட குற்றப்பிரிவு பொலிஸார் எம்.ஆர்.விஜயபாஸ்கர் உட்பட 7 பேர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். பிறகு வழக்கு சி.பி.சி.ஐ.டி.இக்கு மாற்றப்பட்டது.


இதனையடுத்து, பிணை கேட்டு நீதிமன்றத்தில் விஜயபாஸ்கர் மனுத் தாக்கல் செய்தார். இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால், அவர் தலைமறைவானார். அவரை பிடிக்க 5 தனிப்படைகளை பொலிஸார் அமைத்து தேடி வந்தனர்.

இந்நிலையில், நில மோசடி வழக்கில் எம்.ஆர்.விஜயபாஸ்கரை கேரளாவில் வைத்து சி.பி.சி.ஐ.டி., பொலிஸார் கைது செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கேப் கனாவரல்

ஆய்வாளர்கள் தங்க

# நிலவில் பிரமாண்ட குகை!



சுமார் 55 ஆண்டுகளுக்கு முன்பு நீல் ஆம்ஸ்ட்ராங் மற்றும் ஆல்ட்ரின் ஆகியோர் நிலவில் தரையிறங்கிய இடத்திலிருந்து சற்று தொலைவில் பிரமாண்டமான குகை இருப்பதை விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர்.

எதிர்காலத்தில் நிலவை ஆய்வை செய்ய விண்வெளி வீரர்கள் அங்கு சென்று தங்குவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த குகை அப்பல்லோ 11 தரையிறங்கிய இடத்தில் இருந்து வெறும் 250 மைல்கள் (400 கி.மீ.) தொலைவில் அமைந்துள்ளது. இந்த குகை மிக ஆழமானது. ரேடார் தரவுகள், குகையின் ஆரம்ப பகுதியை மட்டுமே உறுதிபடுத்தி உள்ளன. இது குறைந்தபட்சம் 130 அடி (40 மீட்டர்) அகலமும், பல்லாயிரக்கணக்கான மீட்டர் நீளமும் கொண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த பெரிய குழியில் ஆய்வாளர்களுக்கான நிரந்தர ஆய்விடம் அமைக்க முடியுமாம்.

மேலும், நிலத்தை தாங்க முடியாத வெப்பநிலையிலிருந்தும், கதிர்வீச்சிலிருந்தும் ஆய்வாளர்களை பாதுகாக்க முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.


அதேசமயம், இதுபோன்ற 200க்கும் மேற்பட்ட குகைகள் நிலவில் இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலவில் குகை இருப்பது தொடர்பான ஆய்வுகள் கடந்த 50 ஆண்டாக மர்மமாக இருந்து வந்த நிலையில் இந்த தகவல் முக்கியமானதாக பார்க்கப்படுகிறது.

மஸ்கட்

ஓமான் துப்பாக்கிச் சூட்டில்

# 4 பேர் பலி



ஓமானின் தலைநகர் மஸ்கட் நகரில் மதக் கூட்டத்தின் போது துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 4 பேர் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர்.

700 பேர் வரை கூடியிருந்த கூட்டமொன்றிலேயே இந்த தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, குறித்த பகுதியில் உள்ள அமெரிக்கர்களை பாதுகாப்பாக இருக்கும்படி ஓமானில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.





பெருவிளையாட்டு போட்டிகளில்

# கோரக்கர் த.ம.வி. சம்பியன்

வி.ரி.சகாதேவராஜா

சம்மாந்துறை வலய விளையாட்டு போட்டியின் பெருவிளையாட்டு போட்டிகளில் கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயம் சம்பியனானது.

நான்கு போட்டிகளில் சம்பியனான கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயம், ஒரு போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்றது.

பாடசாலை விளையாட்டு பயிற்றுவிப்பாளர் கே.எல்.எம் ஸகி அனைத்து போட்டிகளுக்குமான பயிற்சியை இரவுபகல் பாராமல் வழங்கியிருந்தார்.

கரப்பந்தாட்டம் 16 வயதுக்குட்பட்ட மற்றும் 18 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கானத போட்டியில் சம்பியனானதுடன் 18 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான போட்டியிலே இரண்டாமிடத்தையும் மற்றும் கால்பந்தாட்ட போட்டியில் 17 மற்றும் 20க்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் கோரக்கர் த.ம.வி. சம்பியனானது.

இதனை விட மாகாணமட்ட போட்டிகளுக்கு மேசைப் பந்தாட்டம் 16 வயது ஆண், பெண் மற்றும் இருபது வயது ஆண் ரக்பி என்பன மாகாணமட்ட போட்டிகளில் கோரக்கர் த.ம.வி. பங்குபற்றவுள்ளது.

இலங்கைக்கு எதிரான தொடரிலிருந்து

# ஹர்திக் பாண்டியா விலகினார்?



இலங்கைக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இந்திய வீரர் ஹர்திக் பாண்டியா பங்கேற்க மாட்டார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

டி20 உலகக் கோப்பை மற்றும் ஜிம்பாவே தொடருக்கு பின் இந்திய அணி இலங்கை சென்று தலா 3 டி20, ஒருநாள் போட்டிகளில் மோதவுள்ளது. ஜூலை 27இல் முதல் டி20 தொடங்குகிறது. தொடர்ந்து மூன்று நாள்களில் (27,28,29) மூன்று டி20 போட்டிகளிலும் விளையாடுகிறது. இதன்பின் ஒகஸ்ட் 2, 4, 7ஆம் திகதிகளில் 50 ஓவர் போட்டிகள் நடக்கவுள்ளன.

ரோகித் சர்மா டி 20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்ற நிலையில் ஹர்திக் பாண்டியா இலங்கை செல்லும் இந்திய டி20 அணிக்கான கேப்டனாக செயல்படவுள்ளார்.

எனினும், ஹர்திக் பாண்டியா அதன்பின்னர் நடக்கும் மூன்று ஒருநாள் போட்டிகளில் பங்கேற்க மாட்டார் என பி.சி.சி.ஐ. அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.


தனிப்பட்ட காரணங்களுக்காக ஹர்திக் விலகுகிறார் என்று அந்த அதிகாரி உறுதிப்படுத்தி உள்ளார்.

# ஒலிம்பிக் தீபத்தை ஏந்திய தமிழன்



இலங்கைத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த தர்ஷன் செல்வராஜாவுக்கு ஒலிம்பிக் தீபத்தை ஏந்திச் செல்லும் வாய்ப்பு முதன்முறையாக கிடைத்தது.

பிரான்ஸ்- பாரிஸ் நகரில் திங்கட்கிழமை(15) அவருக்கு இந்த வாய்ப்பு கிடைத்தது. ஒலிம்பிக் தீபத்தை 2.5 கிலோ மீற்றர் தூரம் அவர் ஏந்திச் சென்றுள்ளார். பிரான்ஸில் சுவையான பாண் தயாரிக்கும் போட்டியில் வெற்றி பெற்ற முதல் ஆசிய நாட்டவர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



எல்.பி.எல்: கோல் மார்வெல்ஸை வென்றது

# கொழும்பு ஸ்ரைக்கர்ஸ்

லங்கா பிறீமியர் லீக்கில் (எல்.பி.எல்.), கொழும்பில் திங்கட்கிழமை (15) நடைபெற்ற கோல் மார்வெல்ஸுடனான போட்டியில் கொழும்பு ஸ்ரைக்கர்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கொழும்பு ஸ்ரைக்கர்ஸ்

கோல் மார்வெல்ஸ்: 138/10 (19.5 ஓவ.) (துடுப்பாட்டம்: டிம் செய்ஃபேர்ட் 44 (38), பானுக ராஜபக்ஷ 35 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: மதீஷ பத்திரண 4/20 [3.5], ஷடாப் கான் 2/20 [4], டுனித் வெல்லலாகே 2/30 [4], பினுர பெர்ணாண்டோ 1/26 [4])

கொழும்பு ஸ்ரைக்கர்ஸ்: 142/3 (18.2 ஓவ.) (துடுப்பாட்டம்: முஹமட் வஸீம் 50 (44), கிளென் பிலிப்ஸ் ஆ.இ 31 (32), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 23 (17), சதீர சமரவிக்கிரம ஆ.இ 15 (12), அஞ்சலோ பெரேரா 11 (06) ஓட்டங்கள். பந்துவீச்சு: மகேஷ் தீக்ஷன 1/17 [4], சஹான் ஆராச்சிகே 1/9 [1.2], ஜனித் லியனகே 0/6 [1], ஜெஃப்ரி வன்டர்சே 0/26 [4], டுவைன் பிறிட்டோறியஸ் 0/29 [4])

போட்டியின் நாயகன்: மதீஷ பத்திரண

இந்நிலையில், மற்றைய போட்டியில் தம்புள்ள சிக்ஸர்ஸை நடப்புச் சம்பியன்களான கண்டி பல்கொன்ஸ் வென்றது.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 17, ஜூலை 2024, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.